வரையறுத்த இலங்கை இறப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக் கூட்டுத்தாபனத்தின் (‘‘கம்பனி’’) 2016 ஏப்ரல் 01 இலிருந்து 2019 மார்ச் 31 வரையான காலப்பகுதியின் செயற்பாடுகள் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

---

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்படுகின்ற ஒவ்வொறு நிறுவனத்தினாலும் அந்த நிறுவனம் சம்பந்தமாக வருடாந்தமும் உரிய நேரத்திலும் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தாமாக வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையாக ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும். அந்த அதிகாரச்சட்டத்தின் 16(2) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்படும் ஒவ்வொரு நிறுவனம் சம்பந்தமான வருடாந்த நிதிக்கூற்றுக்கள், சட்ட விதிகளின் மூலம் காட்டப்படக் கூடியவாறான காலப்பகுதிக்குள் அந்த நிறுவனங்களின் வருடாந்த செயலாற்றல் அறிக்கைகளுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அந்த அதிகாரச்சட்டத்தின் 38(1)(ஈ) பிரிவின் பிரகாரம் ஆண்டறிக்கை மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் தேவையான நேரங்களுக்குள் தயாரித்தல் இடம்பெறுகின்றது என உறுதிப்படுத்த வேண்டியதுடன் அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனம் தொடர்பான ஆண்டறிக்கையை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் கவனித்துக் கொள்ள வேண்டும்.

**1.3 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

---

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்களுடன் வரைவு ஆண்டறிக்கையை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், 2016 ஏப்ரல் 01 ஆந் திகதியிலிருந்து 2019 மார்ச் 31 ஆந் திகதி வரையான 3 ஆண்டுகளுக்கான நிதிக்கூற்றுக்களும் வரைபு ஆண்டறிக்கையும் இந்த அறிக்கைத் திகதி வரை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2. ஏனைய சட்டரீதியான மற்றும் ஒழுங்குபடுத்துதல் தேவைப்பாடு தொடர்பான அறிக்கை**

---

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டம் பின்வரும் தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட நிதி ஏற்பாட்டினை உள்ளடக்கியுள்ளது.

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 150(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஐந்தொகைத் திகதியிலிருந்து ஆறு மாதங்களுக்குள் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்காக பொறுப்பான நபர்களினால் சான்றுப்படுத்தப்படுகின்றது என கம்பனியின் பணிப்பாளர் சபை சான்றுப்படுத்துதல் வேண்டும்.

### 2.1 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| வழங்கப்படாத கணக்காய்வுச் சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2010 யூலை 01 ஆந் திகதிய பீஈ/ஜிஓசீஓ/ரீஆர்9 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட கடிதத்திற்கு இணங்க வரையறுத்த இலங்கை இறப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக் கூட்டுத்தாபனத்திற்கு தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவர் அக்கடிதத் திகதியிலிருந்து ஒரு ஆண்டு காலத்திற்கு நியமிக்கப்பட்டிருந்தும் உரிய நியமனம் நீடிக்கப்படாது 2019 ஆம் ஆண்டு வரை தகுதிவாய்ந்த அதிகாரியாகச் செயற்பட்டிருந்தார். | தகுதிவாய்ந்த அதிகாரியாகச் செயற்பட்டு வந்த டபிள்யூ.எஸ்.கமகே அவர்களின் நியமனம் 2011-07-01 ஆந் திகதியிலிருந்து இன்று வரை அமுலுக்கு வரும் வகையில் ஒழுங்குமுறைப்படுத்துவதற்கும் அடுத்துவரும் 06 மாத காலத்திற்கு அவரின் நியமனத்தை நீடிப்பதற்கும் தற்பொழுது தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | தகுதிவாய்ந்த அதிகாரியின் ஒரு ஆண்டு பதவிக் காலம் காலாவதியாகி யுள்ளதனால் உடனடியாக அப்பதவியை வகிப்பதனை சட்ட மாக்குவதற்கு விரைவாகச் செயற்படல் வேண்டும். |
| (ஆ) 2011 மார்ச் 31 ஆந் திகதியில் உள்ளவாறான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களுக்கு இணங்க வரையறுத்த இலங்கை இறப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக் கூட்டுத்தாபனத்தின் முதலீடு செய்யப்பட்ட ரூபா 52 மில்லியன் தொகையான முதலீடுகளின் நிகழ்கால நிலைமை தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | இம்முதலீட்டு மீதி 2002 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்டு வரும் மீதியானதுடன் அது Lanka Products Expert Corporation பங்குடமையினால் மேற்கொள்ளப்பட்ட முதலீடாகும். இன்றுவரை இது தொடர்பாக தகவல்களை தேடிக் கண்டுபிடிக்க முடியாதுள்ளதுடன் அம்மீதி தொடர்பான தகவல்களைத் தேடிப்பார்த்து சமர்ப்பிக்குமாறு தகுதிவாய்ந்த அதிகாரிக்கு தெரியப்படுத்தப்பட்டது. | முதலீட்டிற்குரிய தகவல்களை நாளதுவரையாகப் பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) 2011 மார்ச் 31 ஆந் திகதியில் உள்ளவாறான கணக்காய்வு செய்த நிதிக்கூற்றுக்களுக்கு இணங்க தொடர்புபட்ட | இம்மீதிகள் 2005 ஆம் ஆண்டிலிருந்து காணப்படுவதுடன் அப்போது கணக்காய்வு செய்த திஸ்ஸ பெர்ணாந்து கம்பனியால் | பெறவேண்டிய மீதிகள் தொடர்பான அறிக்கை முறையாக பேணப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தரப்பினர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 764,957,506 கூட்டு மொத்தமான மற்றும் ரூபா 56,133,035 கூட்டுமொத்தமான வணிக மற்றும் ஏனைய பெற வேண்டிய மீதிகள் சம்பந்தமாக 2019 மார்ச் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிட வேண்டிய மீதி தொடர்பான துணைப் பதிவேடு காலப்பகுப்பாய்வு என்பன சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | இக்காலப்பகுதி தொடர்பாக அவ்வாறான அறிக்கை வழங்கப்பட்டிருக்காத போதிலும், அத்தகவல்களைத் தேடிப்பார்த்து தகுதிவாய்ந்த அதிகாரிக்கு தெரியப்படுத்தப்பட்டது. | |
| (ஈ) | 2011 மார்ச் 31 ஆந் திகதியில் உள்ளவாறான கணக்காய்வு செய்த நிதிக்கூற்றுக்களுக்கு இணங்க ரூபா 17,357,133 கிரயமான வாகனங்கள் மற்றும் ரூபா 23,530,433 கிரயமான இயந்திரங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு முதலீட்டாளருக்கு விற்கப்பட்டிருந்தும் மதிப்பீட்டு அறிக்கை மற்றும் பணம் பெற்றுக் கொண்டதனை உறுதிப்படுத்தும் அறிக்கை என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | முதலீட்டாளருக்கு விற்பனை செய்வதற்குரிய அனைத்து செயற்பாடுகளும் இடம்பெற்றதானது அரசாங்க வளங்கள் முகாமைத்துவ கூட்டுத்தாபனத்தினால் என்பதனால் அந்த நிறுவனத்திடம் விசாரித்து உங்களுக்குத் தெரிவிப்பேன். | நிலையான சொத்துக்களை கைதவிர்ப்புச் செய்வதற்கான அறிக்கை பாதுகாப்பாக வைத்திருக்கப் படுதல் வேண்டும். |
| (உ) | 2011 மார்ச் 31 ஆந் திகதியில் உள்ளவாறான கணக்காய்வு செய்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 1,283,471 காசு மீதியையும் ரூபா 3,037,306 நிலையான வைப்பு பண மீதியையும் உறுதிப்படுத்துவதற்குத் தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | அரசாங்க வளங்கள் முகாமைத்துவ கூட்டுத்தாபனத்தை விசாரித்து உங்களுக்கு தெரிவிப்பேன். | 2011 மார்ச் 31 ஆந் திகதியில் உள்ளவாறான உரிய சொத்துக்கள் சம்பந்தமாக நாளதுவரையான அறிக்கை பேணப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | காணியை பிணையாக வைத்து நிதி நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொண்ட ரூபா 901,610,000 தொகையான நீண்டகாலக்கடன், ரூபா 17,185,562 தொகையான வங்கி மேலதிகப்பற்று மற்றும் அந்த மீதிகளின் நிகழ்கால நிலைமை தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | முதலீட்டாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணங்களின் மூலம் பொரளை மக்கள் வங்கி கிளையில் காணப்பட்ட இக்கடன் மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அத்தகவல்களை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்குமாறு தகுதிவாய்ந்த அதிகாரிக்கு தெரியப்படுத்தப் பட்டுள்ளது. | 2011 மார்ச் 31 ஆந் திகதியில் காணப்பட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சம்பந்தமான நாளதுவரையான அறிக்கை பேணப்படுதல் வேண்டும் |
| (எ) | 2011 மார்ச் 31 இல் உள்ளவாறான கணக்காய்வு செய்த நிதிக்கூற்றுக்களுக்கு இணங்க வணிக மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மீதி ரூபா 10,768,203 தொகையையும், நிலையான சொத்துக்களை அகற்றுதல் அடிப்படையில் இனங்காணப்படாத ரூபா 17,874,912 தொகையையும் உறுதிப்படுத்துவதற்குரிய விபரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | உரிய தகவல்களை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்குமாறு தகுதிவாய்ந்த அதிகாரிக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | 2011 மார்ச் 31 ஆந் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சம்பந்தமாக நாளதுவரையான அறிக்கை பேணப்படுதல் வேண்டும். |
| (ஏ) | எல்பிடிய போம் இறப்பர் தொழிற்சாலையில் இடம்பெற்ற ரூபா 500 மில்லியனுக்கு அண்மித்த அரசாங்க நிதியின் வீண் விரயம் தொடர்பாக இலஞ்சம் மற்றும் மோசடிகள் ஆணைக்குழுவில் தொடுக்கப்பட்ட வழக்கின் நிகழ்கால நிலைமை தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | இது தொடர்பாக இலஞ்சம் மற்றும் மோசடிகளை புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவிடம் விசாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்து உங்களுக்கு தெரிவிப்பேன். | நிதி வீண் விரயம் தொடர்பாக எடுத்துள்ள முயற்சிகள் சம்பந்தமான நிகழ்கால நிலைமை நாளதுவரையாகப் பேணுதல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

------------------------------------------

2010 ஏப்ரல் 30 ஆந் திகதிய 1651/20 ஆம் இலக்க வர்த்தமானியில் வரையறுத்த இலங்கை இறப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக் கூட்டுத்தாபனமானது அரசாங்க வளங்கள் மற்றும் தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டிருந்தும் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 06 தொழிற்சாலைகளில் 03 தொழிற்சாலைகள் அரசாங்க வளங்கள் முகாமைத்துவ

வளங்கள் கூட்டுத்தாபனத்தின் மூலமும் வரையறுத்த இறப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக் கூட்டுத்தாபனத்தின் மூலமும் தனியார் துறைக்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்ததுடன் சில்வடெல் தொழிற்சாலையானது காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிடப்பட்டிருந்தும் அது தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. அவ்வாறே எல்பிட்டிய தொழிற்சாலை 10 ஆண்டுகளாக விளைவற்றுக் காணப்பட்டது.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2012 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரை மாவனெல்ல கேந்திர நிலையம் மாவனெல்ல டயர் டியூப் மற்றும் பதுரலிய கிரேப் இறப்பர் ஆகிய 03 தொழிற்சாலை களிலிருந்து அறவிடப்படுகின்ற குத்தகையானது குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம் அரசாங்க வளங்கள் முகாமைத்துவ கூட்டுத்தாபனத்தால் அறவிடப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு அறிவிடப்பட்டுள்ளது என்பதற்கான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | இப்பணத்தை அரசாங்க வளங்கள் முகாமைத்துவ கூட்டுத்தாபனம் சேகரிப்பதனால் அத்தகவல்கள் அரசாங்க வளங்கள் முகாமைத்துவ கூட்டுத்தாபனத்திற்குரியதாகும். அக்கூட்டுத்தாபனத்தை விசாரித்து தகவல்களைச் சமர்ப்பிப்பேன். | அரசாங்க ஆதனங்களை குத்தகை அடிப்படையில் வழங்கியதன் பின்னர் அக்குத்தகை வருமானம் முறையாக அறவிடப் படுகின்றதா என்பது சம்பந்தமான தகவல்கள் முறையாகப் பேணப்பட வேண்டியதுடன் இது தொடர்பான தகவல்களை கணக்காய்விற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை இறப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி கூட்டுத்தாபனத்தின் மாவனெல்லையில் அமைந்துள்ள கேந்திர நிலைய / துண்டு இறப்பர் தொழிற்சாலையின் பிரதான கட்டிடத்தின் கூரையின் ஒரு பகுதி 2018 யூலை 07 ஆந் திகதி உடைந்து விழுந்துள்ளதுடன் மீண்டும் 2019 மே 24 ஆந் திகதியும் கூரையின் ஒரு பகுதி உடைந்து விழுந்துள்ளது என அறிவிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க 2019 யூலை 11 ஆந் திகதி வரையும் அதனைப் | கூட்டுத்தாபனம் குத்தகைக்கு வழங்கிய தொழில்சாலைகளிலிருந்து கிடைக்கின்ற குத்தகைப் பணம் இன்று வரை அரசாங்க தொழில் முயற்சிகள், மலைநாட்டு உரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சிற்கு கிடைப்பதுடன் கூட்டுத்தாபனத்தின் மாதாந்த பராமரிப்பிற்காக அதில் ரூபா 100,000 பணம் மாத்திரம் மாதாந்தம் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்படுகின்றது. கூட்டுத்தாபனத்தின் குத்தகைக்கு வழங்கியுள்ள | குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம் தொழில்சாலை சேதமடைந்ததனை புனரமைப்புச் செய்வதற்காக விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் உடன்படிக்கையின் பிரகாரம் குத்தகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததுடன் அதன் காரணமாக 2018 யூலை 13 ஆந் திகதியிலிருந்து 2019 மார்ச் 31 ஆந் திகதி வரையான காலத்திற்காக ரூபா 5,938,623 தொகையான குத்தகை பொதுத்திறைசேரிக்குச் செலுத்தப்பட்டிருக்க வில்லை. | மாவனெல்லை கேந்திர நிலையம் / துண்டு இறப்பர் தொழிற்சாலையின் பிரதான கட்டிடத்தில் உடைந்து விழுந்துள்ள கூரையை திருத்தம் செய்து கூட்டுத்தாபதனத்திற்குச் சொந்தமான குத்தகைக்கு வழங்கியுள்ள தொழிற்சாலைக்குரிய குத்தகைப் பணத்தை அறவிடுகின்ற அரசாங்க தொழில்முயற்சி, மலைநாட்டு உரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சினால் மேற்கொள்வதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. | எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2010 யூன் 23 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் அமைச்சரவை நியமித்த நிரந்தர மீளாய்வுக் குழுவின் மேற்பார்வையின் கீழ் மற்றும் அரசாங்க தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் தொழில்நுட்ப வழிகாட்டலின் அடிப்படையில் தொழிற்சாலையினை குத்தகைக்கு வழங்குவதற்காக தனியார் துறையின் முதலீட்டாளர் களிடமிருந்து விருப்பக்கூற்றினை தெரிவு செய்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தும் பொருத்தமான முதலீட்டாளரை தெரிவு செய்வதற்கு முன்னர் 2011 பெப்ரவரி 14 ஆந் திகதி வரை 06 ஏக்கர் 07 பேச்சர்ஸ் காணி கட்டிடங்களுடன் வஹரக கிரேப் இறப்பர் தொழிற்சாலையானது இறப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக் கூட்டுத்தாபனத்தினால் தனியார் தரப்பினருக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. | அரசாங்க வளங்கள் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சு செயலாளரின் MSRED/6/1/4 ஆம் இலக்க 2011-01-27 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள அங்கீகாரத்தின் அடிப்படையில் மஹரக தொழிற்சாலை தனியார் துறைக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டது. | அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | மஹரக தொழிற்சாலையின் குத்தகை தற்பொழுது செயற்படாதுள்ள வரையறுத்த இலங்கை இறப்பர் உற்பத்தி | அரசாங்க வளங்கள் மற்றும் தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சு செயலாளரின் அங்கீகாரத்தின் | அக்குத்தகையை அரசாங்கத்தின் வருமானத்திற்கு செலவு |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் ஏற்றுமதிக் கூட்டுத்தாபனத்தின் நடைமுறைக் கணக்கிற்கு செலவு வைக்கப்படுவதுடன் அக்குத்தகையினை அரசாங்கத்தின் வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | அடிப்படையில் இறப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக் கூட்டுத்தாபனம் குத்தகைதாரருடன் குத்தகை உடன்படிக்கை செய்து கொண்டுள்ளதுடன் தற்பொழுது நிலுவையான குத்தகையை கொடுப்பனவு செய்வதற்காக குத்தகைதாரர் விருப்பத்தினை வெளியிட்டுள்ளார். | வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக மூடப்பட்டிருந்த கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான எல்பிடிய போம் இறப்பர் தொழிற்சாலையில் நிர்மாணிக்கப்பட்ட 06 ஏக்கர் 03 ரூட் 24.3 பேச்சர்ஸ் காணியின் உரிமை காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு உரியது என்பதனால் அந்த ஆணைக்குழுவினால் அக்காணியையும் கட்டிடங்களையும் வணிக நடவடிக்கைகளுக்காக குத்தகைக்கு வழங்குவதாலும் தொழிற்சாலையில் பொருத்தப்பட்டுள்ள இயந்திரங்களை பெறுகை நடைமுறைகளைப் பின்பற்றி விற்பனை செய்தலும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சினால் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் 2019 ஏப்ரல் 09 ஆந் திகதி பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தும் கணக்காய்வு அறிக்கைத் திகதி வரை அந்நடவடிக்கை இடம்பெற்றிருக்கவில்லை. | 2019-05-02 ஆந் திகதிய பிரதான மதிப்பீட்டாளரிடமிருந்து அது தொடர்பாக 03 மதிப்பீட்டு அறிக்கைகள் வேண்டிக் கொள்ளப்பட்டதுடன் மதிப்பீட்டுத் திணைக்களத்தால் முகங்கொடுக்கின்ற தொழில்நுட்ப சிக்கலின் காரணமாக அந்த அறிக்கையினைத் தயாரித்தல் தாமதமடைந்துள்ளது. அதற்கான பரிகாரமாக இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தினதும் வெளித்தரப்பு பொறியியலாளரினதும் உதவியை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு வழங்குவதற்கு தற்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது அதற்கிணங்க உரிய மதிப்பீட்டு அறிக்கை கிடைத்த உடன் அமைச்சரவை தீர்மானத்தினை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |